# பன்னல பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைக் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 யூன் 10 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 யூலை 02 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் காட்டப்படுள்ள கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பன்னல பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்குரிய உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்காகச் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 23,180 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையான ரூபா 197,556 மற்றும் மரணப் பணிக் கொடைக்கான ரூபா 13,947 என்பன மீளாய்வாண்டிற்குரிய செலவினமாக வருமானச் செலவினக் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிராததுடன் வருட இறுதியில் செலுத்த வேண்டிய தொகை ரூபா 909,562 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் மாகதுர சுகாதார சேவை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 32,988,511 செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய கட்டிடத்தின் கிரயம் கட்டிடங்கள் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை.

(ஈ) 2009 ஆம் ஆண்டில் எழுந்திருந்த உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கணக்கின் மீதிக்கும் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் மீதிகளுக்கிடையேயான வேறுபாட்டினை சரி செய்வதற்காக ரூபா 626,023 ஆனது உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியத்தில் அத்தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. சபையினால் பேணப்படுகின்ற உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் பதிவேட்டில் கடன் மீதி முறையாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. வங்கிமூலம் கடன் தவணைப் பணம் செலுத்தும் வழி மூலங்களைக் கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்டிருந்த ரூபா 3,000,000 தொகையான கடனின் தவணைக் கொடுப்பனவு, வட்டிக் கொடுப்பனவு சம்பந்தமான விபரங்கள் ஏடுகளில் குறிப்பிடப்பட்டிராததுடன் அதற்குரிய அறிக்கை வங்கியிலிருந்து பெறப்பட்டு கோவைலிடல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை இதனால் கடன் மீதிகளுக்கிடையேயான வேறுபாடுகளை திரண்ட நிதியத்தில் சீராக்குவதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்க்காமல் நாட்குறிப்பு இலக்கம் 05 இன் மூலம் மேற்கூறப்பட்டவாறு சீராக்கங்கள் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நிறுத்தி வைத்தல் பணமாக மீளாய்வாண்டினுள் ரூபா 422,365 தொகையானது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் அது நிறுத்தி வைத்தல் வரிப்பணக் கணக்கில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

14 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 473,834,073 ஆக இருந்ததுடன் துணைப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 388,244,478 ஆக இருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட தொங்கல் தன்மை கொண்ட கணக்குகளின் வரவு மீதிகளின் கூட்டுத்தொகை 37,167,993 ஆகும்.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டுக்கும் மேலாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 16,919,078 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

**கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை காரணமாக கூட்டுத்தொகை ரூபா 152,232,983 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 இணங்காமைகள்

கீழே காண்பிக்கப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாண அறிவுறுத்தல்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

மேல்மாகாணத்தில் அமுல்படுத்துகின்ற காணி கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்வதற்குரிய துணை விதிகளின் பிரகாரம் தென்னங் காணிகளைக் கூறுகளாக்குகின்ற போது தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் கூறுத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த 20 ஏக்கர் மட்டிலான 6 தென்னங்காணிகளுக்கு அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 10,882,295 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 36,317,152 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடுகள்

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டு ஊழல்கள்/ குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல வருட காலமாக மீதியாகக் காணப்படுகின்ற நிலுவை மூலதன மானியத் தொகையான ரூபா 18,708,947 ஆனது மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் வங்கிக் கணக்கிற்குரிய வங்கிக் கூற்றுக்களில் 2006 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்டுக் காணப்படுகின்ற இனங்காணப்படாத ரூபா 28,465 ஆன மீதியொன்று மீளாய்வாண்டு இறுதி வரையிலும் இனங்காணப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நானாவித வைப்புக்களின் கீழ் 2001 இலிருந்து 2008 வரையான காலப்பகுதிகளுக்குரியதாகக் காணப்பட்ட ரூபா 656,234 ஆனது மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிராததுடன் 17 சந்தர்ப்பங்களின் கீழ் 2006 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 119,374 தொகையான முற்பணமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வங்கிக் கணக்கிலிருந்து வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படட்டிராத ரூபா 15,142 பெறுமதியான 7 காசோலைகள் காணப்பட்டது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 பெறவேண்டிய வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வுரமானம் என்பவை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டள்ளன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ள படியான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்ட | 2009 உள்ள படியான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா ("000) | ரூபா ("000) | ரூபா ("000) | ரூபா ("000) | ரூபா "(000) | ரூபா ("000) |
| (i) | இறைகள் மற்றும் வரிகள் | 4,287 | 6,371 | 2,083 | 4,347 | 4,612 | 264 |
| (ii) | வாடகை | 15,171 | 12,517 | 2,654 | 14,498 | 20,780 | 6,281 |
| (iii) | அனுமதிப்பத்தரக் கட்டணங்கள் | 3,506 | 1,215 | 2,291 | 3,226 | 3,153 | 73 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 59,066 | 50,493 | 8,573 | 69,042 | 53,547 | 15,495 |
| | மொத்தம் | 82,030 | 70,596 | 15,601 | 91,113 | 82,092 | 22,113 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றங்களினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிட்ட ரூபா 16,529,058 தொகையான தண்டப்பணம் சபையினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 20,239,036 தொகை முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.3.4 ஆதனவரியும் ஏக்கர் வரியும்

மீளாய்வாண்டின் ஆகஸ்ட் வரை நிலுவை ஆதன வரித் தொகை ரூபா 2,196,887 ஆகவும் நிலுவை ஏக்கர் வரித் தொகை ரூபா 570,441 ஆகவும் காணப்பட்டதுடன் இந் நிலுவையினை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் மற்றும் 1988 இன் பிரதேச சபை விதிக்கோவை 143 இல் காண்பிக்கப்பட்டுள்ளதன் படியும் விதி இலக்கம் 33 – 41 இன் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை.

### 2.3.5 கடை வாடகை

சபைக்குச் சொந்தமான வெடகெயாவ பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியின் கடைகளுக்குரிய ஒரே தடவையில் செலுத்தும் பணம் 2005 யூலை அளவில் செலுத்தி முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் அக்கடைகளில் 3 இற்குரிய ரூபா 455,330 தொகையான ஒரே தடவையில் செலுத்தும் பணம் நிலுவையாகக் காணப்பட்டது. உள்ளுராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் கடை வாடகையானது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு தடவை திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான வெடகெயாவ மற்றும் பன்னல பொதுச் சந்தையின் 36 கடைகள் 2003 மற்றும் 2004 இல் மதிப்பிடப்பட்ட வாடகையின் அடிப்படையில் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருந்தது.

### 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டவை | உள்ள படியானவை | முரண் | பாதீடு செய்யப்பட்டவை | உள்ள படியானவை | முரண் |
| மீண்டெழும் செலவினம் | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 |
| ஆளுக்குரிய வேதனம் | 35,481 | 28,321 | 7,160 | 41,799 | 26,984 | 14,815 |
| ஏனையவைகள் | 34,168 | 31,394 | 2,774 | 31,202 | 18,791 | 12,411 |
| உப மொத்தம் | 69,649 | 59,715 | 9,934 | 73,001 | 45,775 | 27,226 |
| மூலதனச் செலவு | 91,395 | 70,996 | 20,399 | 147,933 | 88,415 | 59,518 |
| முழு மொத்தம் | 161,044 | 130,711 | 30,333 | 220,934 | 134,190 | 86,744 |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### 2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| புதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 02 | -- |
| இரண்டாம் நிலைதரங்கள் | 25 | 22 |
| ஆரம்ப தரங்கள் | 84 | 67 |
| ஏனைய(நாளாந்த, தற்காலிக) | - | -- |

### 2.5.2 பதவியினர் முகாமைத்துவம்

சபையினால் அமுல்படுத்தப்படுகின்ற கூட்டுப்பசளை உற்பத்திச் செயற்திட்டத்திற்காக இரண்டு பதிலீட்டு தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 149,958,370 ஆக இருந்ததுடன் அதில் 3 வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து காணப்படுகின்ற முற்கொடுப்பனவுகள் ரூபா 200,000 இற்காக மாத்திரமே காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.6.2 அறவிடப்பட வேண்டியுள்ள பதவியினர் கடன்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த பதவியினர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 209,944 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேறபட்ட காலமாக அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகையும் ரூபா 209,944 ஆக இருந்தது.

## 2.7 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பிரதேச சபையின் சேவையாற்றி ஓய்வு பெற்று உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையினைச் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கு உரிய சபையினால் மேற்கூறப்பட்ட நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரியமுறையில் செலுத்தப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரை அந்த நிதியத்திற்குச் செலுத்தவேண்டிய மீதி ரூபா 3,925,512 ஆக இருந்தது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணைப் பணமாக ரூபா 16,462 அந்த நிதியத்தினால் அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த அறவீடுகள் எந்த ஊழியர்கள் தொடர்பானவை என்பதனை சபை அறிந்து கொண்டிருக்கவில்லை.

## 2.8 செயலாற்றல்

(அ) பாதீட்டின் மூலம் மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த ரூபா 365,000 தொகையிலான 4 நலன்புரிச் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் அவ்வாறான 5 செயற்திட்டங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,750,000 தொகையானது உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படாது ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) பாதீட்டின் மூலம் மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த ரூபா 5,050,000 தொகையான 6 மூலதன செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் அவ்வாறான 3 செயற்திட்டங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,300,000 தொகையானது உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படாது ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் பாதீட்டில் கட்டிட நிர்மாணங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,350,000 தொகையில் பாதிடப்பட்ட கிரயமான ரூபா 900,000 தொகையான கிரிவுல்ல நூலகக் கட்டிட நிர்மாணம் தவிர எஞ்சிய 4 செயற்திட்டங்களும் மீளாய்வாண்டினுள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமானக் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்